# துறையூர்நகராட்சி

## அறிவிப்பு

## தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM)

திருச்சி மாவட்டம், துறையூர் நகராட்சியால் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பெரம்பலூர் சாலையில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயளிகளுடன் வரும் உறவினர்கள் தங்குவதற்கு ஏதுவாக சிறப்பு உறைவிடம் (Special Shelter) கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இதனை 5 வருடங்களுக்கு இயக்கவும் மற்றும் பராமரிக்க முன் அனுபவமுள்ள மற்றும் சமூக மனப்பான்மையுடைய தன்னார்வலர்களிடமிருந்து விருப்ப மனுக்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பங்கள்அலுவலக மின்னஞ்சல் (இ–மெயில்) commr.thuraiyur@tn.gov.in மூலம் அல்லது ஆணையர், துறையூர் நகராட்சி என்ற முகவரிக்கு 25.10.2023க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. தன்னார்வு தொண்டு நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருக்கவேண்டும். பதிவு புதுபிக்கபட்டு நடைமுறையில் இருக்கவேண்டும்.
2. நிறுவனத்தின் வரவு செலவு வருமான வரி கணக்குகள் தாக்கல் செய்து இருக்கவேண்டும். இதற்கு முன்னர் பராமரிப்பு மற்றும் அனுபவம் குறித்து விபரம் சமர்பிக்கவேண்டும்.
3. சிறப்பு உறைவிடம் 24 மணிநேரமும் இயங்கவேண்டும். அதனை பராமரிக்கும் வகையில் பணியாளர்கள் நியமிக்கவேண்டும்.
4. பராமரிப்பு பணியாளர்கள் 2 நபர்கள் (இரவு மற்றும் பகல்) ஒரு நாளைக்கு இரண்டு முறை கழிவறைகள் சுத்தம் செய்ய தூய்மை பணியாளர்கள் ஒரு கண்காணிப்பாளர் நியமிக்கப்பட வேண்டும்.
5. பணியாளர்களின் ஊதியம் ஒப்பந்த விருப்ப கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.
6. நகராட்சியால் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் மட்டுமே வசூலிக்க வேண்டும். அவ்வாறு வசூலிக்கபடும் தொகையினை பிரதி வாரம் நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும்.

7. சிறப்பு உறைவிடம் பராமரிப்பு பணி கண்காணிக்க நிர்வாக குழு (Executive Committee) அமைக்கபடும். மேலும், உறைவிடம் நிர்வாக குழு Shelter Management Committee) அமைக்கப்படும்.
8. சிறப்பு உறைவிடம் மின் பயன்பாடு கட்டணம் உரிய காலகேடுவிற்குள் தவறாமல் செலுத்தப்பட வேண்டும்.
9. Memorandum of Agreement இல் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்படும்.
10. தங்களின் இயக்குதல் மற்றும் பேணுதல் பணிகள் சரிவர செய்யப்படவில்லை என்றால் தங்களின் உரிமை ரத்து செய்யப்படும்.
11. இக்கட்டிடம் எந்த காரியத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டுமோ அதற்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.
12. ஒப்பந்தத்தில் தெரிவித்துள்ளபடி தேவையான பணியாளர்கள் தங்களால் நியமனம் செய்யப்பட்டு அவர்களுக்கு EPF, ESI போன்றவைகள் பிடித்தம் செய்யப்பட்டு அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.
13. இக்கட்டிடத்தில் உள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்களுக்கு எந்த ஒரு சேதாரம் ஏற்படாமல் பராமரிக்கப்பட வேண்டும்.
14. இந்நகராட்சியில் உள்ள அலுவலர்களால் எந்த நேரத்திலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.
15. தங்களின் செயலாக்க பணிகளில் ஏதேனும் சுணக்கம் ஏற்பட்டால் தங்களின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு பிற நிறுவனங்களுக்கு ஒப்படைப்பு செய்யப்படும். இதற்கான நஷ்ட ஈடு ஏதும் கோர உரிமையில்லை.
16. இக்கட்டிடத்திற்கு வரும் நபர்களுக்கு முறையே கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
17. தேசிய நகர்ப்புற வாழ்வாதாரம் இயக்கம் (NULM) வழிகாட்டு முறைகளின் படி செயல்படுத்தப்பட வேண்டும்.
18. இக்கட்டிடத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது. கூடுதலாக தேவைப்படும் பட்சத்தில் தங்கள் நிறுவனம் மூலம் பொருத்திக் கொள்ளவேண்டும்.

19. இந்நகராட்சியால் அவ்வபோது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு தங்களின் நிறுவனம் கட்டுப்பட வேண்டும்.

20. ஆண், பெண் இரு பாலர்கள் தங்குமிடங்களில் நகராட்சி அறிவுரைப்படி பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும். பதிவேடு பிரதி மாதம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் பார்வைக்கு சமர்ப்பித்து ஒப்பம் பெறப்பட வேண்டும்.

21. உள்நோயாளிகளின் உதவியாளர் தவிர வேறு வெளிநபர்கள் தங்க அனுமதியில்லை.